**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 156/2019**

**வா.சா.1 – மூர்த்தி**

**<u>17-11-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

2. எனக்கு பாத்தியப்பட்ட பூமி டி.எஸ் எண். 234ல் உள்ளது. 234ல் உரிமை உள்ளதை காண்பிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா மாநகராட்சி பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா பெயரில் உள்ளது. நான் சொல்வது போல் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 234 காலையில் நான் ஆக்கிரமிப்பு செய்ததாக மாநகராட்சியில் இருந்து வா.சா.ஆ.8 அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அதன் பிறகு தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அரசாங்க சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் உரிமையில் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரமுடியாது என்றும், எனது வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

3. 234 காலையில் 10 X 6 அளவுள்ள சுவர் கட்டியிள்ளேன் என்றால் 4 அடிக்கு கட்டியுள்ளேன். 234காலை வழியாகதான் எனது வீட்டிற்கு பின்புறம் உள்ள நபர்கள் செல்லமுடியும் என்றால் 4 அடி பொது வழிதான் நாங்கள் அதில் செல்வதை அவர்கள் தடுக்கிறார்கள். எங்கள் வீட்டிற்கு பின்னால் உள்ளவர்கள் எங்களை தடுப்பதால் நாங்கள் அவர்களை தடுக்கிறோம் என்றால் சரிதான். 234 காலையில் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பொது தடம் என்றும், அதனை நானோ எனது வீட்டின் பின்னால் உள்ளவர்களோ பொதுமக்கள் பயன்படுத்துவதை தடுப்பதற்கு உரிமை இல்லை என்றும், அது மாநகராட்சிக்கு சொந்தமான இடம்

என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பொறுத்து வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.17 16:36:06 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.